C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 NOVEMBER 2024 ஆகாரம் : 11



கர்த்தருக்குப் பயப்படுகிற

## பெரியோரையும்

## சிறியோரையும்

ஆசீர்வதிப்பார்

சங்கீதம் 115:13

# NOVEMBER 2024

# UPCOMING EVENTS

**ALL** — **Wednesday** 7:30pm
Bible study & Prayer
Parsonage
Presbyter - 0567668348

**09 23** — **Saturday** 7:30pm
Evening service
Presbyter - 0567668348

**16** — **Saturday** 7:30pm
Holy communion service
Presbyter - 0567668348

**08** — **Friday** 7:30pm
Men's Fellowship Prayer
Mr. Ashok Kumar
0508429659

**15** — **Friday** 8:00pm
Women's Fellowship Prayer
Mrs.Sagena Livingston
0553896871

**22** — **Friday** 8:00pm
Youth Fellowship Prayer
Mr.Stephen Chellaraj
0569906933



# FROM THE PASTOR'S DESK

**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

இந்தியாவின் விடுதலைக்காக அரும்பாடுபட்டவர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஆவார்.அவர் தமது சுயசரிதை (AN AUTOBIOGRAPHY) என்ற நூலில் 3259 நாட்கள் அதாவது 9 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்.பிறகு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பொறுப்பேற்று, அநேக நல்ல திட்டங்களை தீர்மானித்து செயல்படுத்தினவர்.இவரே "நவீன இந்தியாவின் சிற்பி" என்று போற்றப்பட்டவர். இந்திய நாட்டின் விடுதலைக்காக செல்வ செழிப்பான குடும்பத்தில் 1889 நவம்பர் 14 அன்று பிறந்த நேரு அவர்கள் தன்னலம் துறந்துப் போராடினார், இந்தியாவிற்கு விடுதலை கிடைத்தது. குழந்தைகள் மீது மிகுந்த அன்பு செலுத்தினார், எனவே குழந்தைகளால் "நேரு மாமா"என்று அழைக்கப்பட்டார். இவரது பிறந்த தினமே குழந்தைகள் தினமாக நவம்பர் 14 அன்று இந்தியாவில் கொண்டாடப்படுகிறது.இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடிய இவர் செழிப்பையும், சுயத்தையும் வெறுத்தவர். உலக மக்களின் பாவ மீட்பிற்காக தம்மை ஈந்த ஆண்டவர் இயேசு நம்மை அவர் வழியில் நடக்க அழைக்கிறார். நமக்கு உதாரணமாக சிறு பிள்ளைகளை முன் நிறுத்துகிறார், அதனை சற்று சிந்திக்கலாம்.

### இடம் அளியுங்கள்:

ஆண்டவர் இயேசு சிறு பிள்ளைகளைக் கண்டு அவர்களுக்கு இடம் கொடுங்கள் (மாற்கு 10:14) என்று பெரியவர்களிடம் கூறினார். சிறுபிள்ளைகளிடம் உள்ள மாயமற்ற அன்பைக் காணுகிறார், எனவே இடம் கொடுங்கள் என்று கூறுகிறார். "உன்னைப் போல பிறரிடம் அன்பு செய்" என்று கட்டளையிடுகிறார். நம் ஒவ்வொருவர் உள்ளும் வாழ நமது உள்ளக் கதவைத் தட்டுகிறார் (வெளி.3:27) இடம் கொடுக்கின்ற போது நமக்குள்ளாக வந்து நிறைவாக நம்மை வழி நடத்துவார்.

### ஏற்றுக் கொள்ளுங்கள்:

இறையரசை (KINGDOM OF GOD) சிறுபிள்ளைகளைப் போல ஏற்றுக்கொள்ள வேண்டும். இறையரசில் சமத்துவம், பொதுமைத்தன்மை, சமாதானம், மெய்யான அன்பு போன்றவை நிறைந்திருக்கும். பெரியவர்கள் ஒவ்வொருவரும் சிறுபிள்ளைகளைப் போல தங்களின் குணங்களில் (CHARACTERS) மாறிவிட வேண்டும். கபடமற்ற வாழ்வாக மாறினால் மட்டுமே இறையரசில் இணைய முடியும். (மாற்கு 10:15) ஒவ்வொருவரும் மீண்டும் பிறக்க வேண்டும், அதனையே ஆண்டவர் இயேசு கூறுகிறார். யோவான்(3:3)

**ஆசீர்வதிப்பார்:**

ஆண்டவர் இயேசுவுக்கு நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் இடம் அளிக்க வேண்டும், ஆண்டவரின் கட்டளைகளை ஏற்று அதன் வழி வாழ வேண்டும். அப்போது ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பார். "மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமுவேல் 16:7) ஆண்டவர் இயேசு விரும்புவது, தூய்மையான தாழ்மையான உள்ளத்தையே. இப்படி மாற்றம் பெற ஆண்டவருக்கு பயந்து வாழ வேண்டும். "கர்த்தருக்கு பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்" (சங்கீதம் 115:13)

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# NOVEMBER WINNERS

## KIDS COLORING

Achsah Bernice

Hazel Hartlyn

Jesil Bernice

## FIND THE WAY

Hazel Hartlyn

Jesil Bernice

## WORD SEARCH

Hazel Hartlyn

Jesil Bernice

## CROSS WORDS

Sherinsha

# இருதிசைகள்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

அன்பிற்கினியவர்களே,

திருமறையில் யூத அரசாட்சி காலத்தில் இரண்டு பெண்கள் இரு திசைகளில் செயல்படுவதை 2 நாளாகமம் 22:10-12. ஆகிய பகுதிகளில் படிக்கின்றோம். ஒன்று அழிவை நோக்கியது, மற்றொன்று வாழ்வை நோக்கியது.

## தன்னலம்:

தன் மகன் அகசியா இறந்து போனான் (2 நாளாகமம் 22:9) என்பதை அறிந்த அவன் தாயாகிய அத்தாலியாள் என்பவர் யூதா குடும்பத்தில் உள்ள ராஜ வம்சத்தார் அனைவரையும் வெட்டி அழித்துப் போட்டார். (2 நாளாகமம் 22:10) அத்தாலியாள் யூதா நாட்டிலே அரசியானாள்.(2 நாளாகமம் 22:12) தன்னலத்தோடு ஏழு வருஷம் யூதாவின் மேல் அரசாட்சி செய்தார். அத்தாலியாள் வாழ்வில் தன் மகன் இறந்து போனான்.எனவே, ராஜ வம்சத்தையே அழித்துப் போட்டது மன்றி, தன்னலத்தோடு தானே அரசியாக ஆட்சியையும் ஏற்றார் இந்தப் பெண்.

## பிறர்நலம்:

அத்தாலியாள் கொன்று போடுகிற போது ராஜ வம்சத்திலிருந்து அகசியாவின் ஆண் பிள்ளையாகிய யோவாசை, ராஜாவின் குமாரத்தியாகிய யோசேபியாத் என்றப் பெண் எடுத்து மறைத்து வைத்தாள். ஆறு ஆண்டுகள் மறைத்து வைத்து யோவாசைப் பாதுகாத்தார்.(2 நாளாகமம் 22:11,12) இதற்கான காரணம்,கடவுளின் திட்டம் தெளிவாக நிறைவேறுவதைக் காண முடியும்.2 நாளாகமம் 21:7-ல் கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கை கட்டளையிடுவேன் என்ற உடன்படிக்கை நிறைவேறுகிறது.

பிரியமானவர்களே, அத்தாலியாள் என்றப் பெண் தன்னலத்தோடு ராஜ வம்சத்தையே கொன்றார்.ஆனால் யோசேபியாத் என்றப் பெண்ணோ பிறர் நலத்தோடு யூத வம்சத்தினரின் வாழ்வைத் தேடினார். கடவுளின் உடன்படிக்கையை நிறைவேற்றும் கருவியாக செயல்பட்டார். அன்றைக்கு அழிந்து கொண்டிருந்த கொல்லிமலை மக்களின் வாழ்வில் விடிவெள்ளியாக இயேசுவை வாழ்ந்து காண்பித்தவரே டாக்டர்.ஈவ்லின் பிராண்ட் அம்மையார். அவர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்த மலை இன மக்களுக்கு

கிறிஸ்துவின் அன்பைக் கூற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு தன்னையே வெறுமையாக்கி, முழுவதும் நற்செய்தி பணிக்காக தன்னை அர்ப்பணித்தவர் தான் டாக்டர். ஈவ்லின் பிராண்ட் அம்மையார்.இவர் இங்கிலாந்தில் 1879- இல் ஒரு செல்வ செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர்,நன்கு கற்றுத் தேர்ந்தவர் ஹோமியோபதி மருத்துவம் பயின்றவர்.ஆனால் அருட்பணி தாகத்தோடு இந்தியாவில் உள்ள தமிழகத்தில் அன்றைக்கு சேலம் மாவட்டத்தில் இருந்த கடல் மட்டத்தில் இருந்து 4200 அடி உயர த்தில் உள்ள கொல்லி மலைக்கு வந்து ஆண்டவரின் திருப்பணியை குடும்பமாக நிறைவேற்றினார்.

இவரது வாழ்வின் நோக்கச் சொல் "நம்பு, வெற்றியடைவாய்" (TRUST AND TRIUMP) என்பதாகும். அன்றைய நாளில் கொல்லிமலையில் இருந்த குழந்தை திருமணம், பிறந்தக் குழந்தைகளை கொல்லுவது, மனைவியை தள்ளி வைப்பது,கோடங்கி கேட்பது,ஜோதிடம் பார்ப்பது போன்ற மூட பழக்க வழக்கங்களை முற்றிலும் கலைந்திட அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர். கொல்லிமலை மக்களின் உலக வாழ்வுக்கான தேவைகளையும், நித்திய வாழ்வுக்கான மீட்பராம் இயேசுவையும் அளித்தவரே டாக்டர்.ஈவ்லின் பிராண்ட் அம்மையார் என்ற பெண் ஆவார். அவர்கள் குடும்பத்துடன் கொல்லிமலையில் தன்னலம் துறந்து பணி செய்தவர்கள். நம்மையும் ஆண்டவர் இயேசு இதற்காகவே, "நீங்கள் பூமிக்கு உப்பு,உலகிற்கு வெளிச்சம்" என்று அழைக்கின்றார். அர்ப்பணிப்போமா? ஒப்புக்கொடுக்கும் போது ஆண்டவர் அனைவரையும் ஆசீர்வதிப்பார்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

# *Mrs . P . Velanganni*



# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபையின் சகோதர— சகோதரிகளே, உடன் விசுவாசிகளே உங்கள் அனைவருக்கும் இறை மைந்தன் கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகைக்கான இல்ல சந்திப்புகளை கடந்த மாதத்தில் முடித்திருக்கிறோம். தொடர்ந்து உங்கள் தனிப்பட்ட,குடும்ப ஜெபங்களில் நவம்பர் இரண்டாம் தேதி சனிக்கிழமை நடைபெற இருக்கின்ற அறுப்பின் பண்டிகக்காண வழிபாடு,ஏலநிகழ்வு மற்றும் பிற நிகழ்வுகள் அனைத்தும் நேர்த்தியாக நமது E.C.C திருச்சபை வளாகத்தினுள் உள்ள MAIN HALL—ல் எந்த தடையும் இன்றி நடந்திட ஜெபியுங்கள். இதுவரை மிகவும் அர்ப்பணிப்போடு WEEKLY FOOD SALES —ஐ செய்து வருகின்ற திருச்சபை குடும்பங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து ஜெபியுங்கள், இணைந்திடுங்கள், ஆயத்தமாகுங்கள், அனைவரும் பங்குபெறுங்கள்.

உங்கள் சிந்தனைக்கு பரலோக ராஜ்யம் விதை விதைக்கிறவனுக்கு ஒப்பாயிருக்கிறது. அது மண்,நீர் மற்றும் காற்று ஆகிய மூன்றும் பயிர் வளர்வதற்கு தேவையான அடிப்படைத் தேவையாகும். பரிசுத்த வேதாகமத்தில் அதிக இடங்களில் விதை, விதைக்கிறவன், அறுப்பு, வேலையாட்கள், விளைச்சல் என்பதை நாம் அதிகமான இடங்களில் படிக்கக்கூடும்.

**2 கொரிந்தியர் 9:6—ல் "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்"**

என்று படிக்கின்றோம். சிந்தித்துப் பாருங்கள் விதைப்பின் அவசியம்,நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூர்ணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களுமாய் இருக்கும்படியாக, கர்த்தர் உங்களிடத்தில் சகலவித கிருபையையும்

பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். (2கொரிந்தியர் 9:8) விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதை பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்திக்கச் செய்வார். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்;

**கர்த்தருடைய பிரியத்தை சம்பாதிக்கிற மக்களாக,**
**மனமுள்ள மக்களாக,**
**மகிமையின் மைந்தனிடம்**
**மாசற்ற இதயத்துடன்,**
**மகிபனை தரிசிக்க மங்காத விசுவாசத்தால்,**
**மாட்சிமை உள்ளவரிடத்தில்**
**உற்சாகமாய்,**
**உதாரத்துவமாய்**
**விதைப்போம்,**
**செழிப்போம்,**
**அறுப்போம்,**
**களஞ்சியத்தில் சேர்ப்போம்,**



**இறைப் பணியில்**

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்

# ஆவியின் கனி சமாதானம்



சமாதானக் காரணராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். சமாதானம் என்ற வார்த்தை சூழ்நிலைகளைப் பொறுத்து வெவ்வேறு அர்த்தமுள்ளதாய் இருந்தாலும் இதனை முக்கியமாக மன அமைதி, நல்லிணக்கம் அல்லது பாதுகாப்பு என்ற மூன்று வார்த்தைகளில் பெரும்பாலும் வர்ணித்து விடலாம். இரு நாடுகளுக்குள் சமாதான உறவு, இரு நபர்களுக்குள் சமாதானம், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் சமாதானம், ஒருவருக்குள் உள்ளான மனஅமைதி என பல்வேறு நிலைகளில் சமாதானம் என்கிற அம்சம் வெளிப்படுகிறது.

ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது சமாதானம் என கூறி வாழ்த்துவது இன்றளவும் பல கலாச்சாரங்களில் காணப்படுகிற ஒன்று. உயிர்த்தெழுந்த இயேசுவும் தனது சீடர்களுக்குக் காட்சி கொடுக்கும்போதெல்லாம் உங்களுக்கு சமாதானம்' என்று கூறி வாழ்த்தினார் (யோவான்.20:19,26). புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலனாகிய பவுல் ஏறக்குறைய தனது எல்லா நிருபங்களிலும் 'நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக என வாழ்த்துதலுடன் தொடங்கி தனது நிருபங்களை எழுதியிருப்பதைக் காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சமாதானம் என்ற வார்த்தை பெரும்பாலும் மனஅமைதி என்ற கோணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து உலகத்தில் மனிதனாக பிறந்த போது, பரம சேனையின் திரள் தேவதூதனோடே தோன்றி, பூமியிலே சமாதானம் உண்டாக வாழ்த்தி தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:17). ஆம். உலக அமைதிக்கு இயேசு ஒருவரே காரண கர்த்தாவாக இருக்க முடியும். ஏனெனில் அவரே சமாதானப் பிரபு (ஏசாயா.9:6). அவர் சமாதானத்தின் கர்த்தர் (2தெச.3:16). இந்த சமாதானம் என்பது தேவனால் அருளப்படும் ஈவு. ஏனெனில் அதனைப் படைத்தவர் அவரே (ஏசாயா 45:7). சமாதானத்தை அவரே கட்டளையிடுபவர் (லேவி.26:6) சமாதானக் காரணரும் அவரே (மீகா 5:5).

இந்த சமாதானம் எவருக்கும் எளிதில் கிடைத்துவிடக் கூடியது அல்ல. அது நீதியின் கிரியை மற்றும் பலன் (ஏசாயா 32:17). ரோமர் 5:1ன் படி, நாம் விசுவாசத்தினாலே

நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் என ஏசாயா.26:3ல் பார்க்கிறோம். மட்டுமல்ல, "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 48:22).

அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிகளை கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வலியுறுத்தும் போது, "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" என கூறுகிறார் (பிலிப்பியர் 4:4—7).

கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் (ரோமர் 12:18) என நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவனோடு சமாதானமாக இருக்கும் ஒருவரால் உலகத்தில் எந்தவிதமான சூழ்நிலைகளிலும் மற்றவர்களோடும் சமாதானமாக இருக்க முடியும். (யோவான் 16:33). எப்படியெனில் ரோமர் 8:6ன் படி, மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்" என 2கொரி. 5:17,18 ல் பார்க்கிறோம். முதலாவதாக தேவசமாதானம் நமது இருதயங்களில் ஆளுகை செய்யும் போது (கொலோ 3:15) நம்மால் மற்றவர்களுடன் சமாதானமாக இருக்க முடியும்.மற்றவர்களுடன் சமாதானப் போக்கினை கடைபிடிப்பதில் ஒருவரின் மனோபாவம் அல்லது அவரது அணுகுமுறை முக்கிய பங்கினை வகிக்கிறது. விசுவாசி ஒருவருக்கு தினமும் உணர்த்தி அந்த நல்ல மனோபாவத்தை வெளிப்படுத்த உதவி செய்பவர் ஆவியானவர்.

தேவனுடைய சமாதானத்தை தேவன் நம்மீது திணிப்பதில்லை. ஆனால், அவருடைய மாறாத அன்பை என்றாவது ஒருநாள் ஒருவர் உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் போது அவர் தரும் சமாதானத்தை அவர் பெற்றுக்கொள்கிறார். அதுபோலவே நம்முடன் சமாதானமாயிருக்க நாம் மற்றொருவரைக் கட்டாயப்படுத்த முடியாது. ஏனெனில், உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:17). எனவே, ஆவியானவரின் துணையோடு அவரின் கனியாகிய சமாதானம் நம் வாழ்க்கையில் வெளிப்படும் போது, மற்றவர்கள் என்றாவது ஒருநாள்


அதை இனம் கண்டு நம்முடன் சமாதானமாய் ஒப்புரவாக தேவன் கிரியை செய்வார். ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (5.16:7).

ஜனங்களுக்கு சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிப்பது தான் ஒரு சுவிஷேஷகனுடைய வேலை (ஏசாயா 52:7). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் (மத்தேயு 5:9). எனவே ஆவியின் கனியாகிய சமாதானம் நம்முடைய மனோபாவத்திலும் செயல்பாடுகளிலும் வெளிப்பட நாம் கவனமாக இருக்க வேண்டும். மேலும், "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்மாயிருக்கிறது. ஆனபடியால் சமாதானத்துக் கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் (ரோமர் 14:17,19). நாம் ஒருவரோடொருவர் சமாதானமாயிருப்போம்; அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் நம்மோடு கூட இருப்பார் (2 கொரி. 13:11). ஆமென்

ARTICLE BY

## MR. ASHOKKUMAR

MEN'S FELLOWSHIP




What does a Godly mother look like?

Beautiful mother, youthful mother, rich mother and all kinds of mothers, but what about a Godly mother? Does a Godly mother means she is perfect?

No! It does not. But that means that she has a quality about her that separates her from any other kind of mothers; Not perfect but righteous!

Proverbs 31:30-Charm is deceptive, and beauty is fleeting; but a woman who fears the Lord is to be praised.

## A GODLY MOTHER IS A MOTHER WHO PRAYS AND READS THE WORD OF THE LORD.

It is a habit of her life because she has accepted Jesus as her personal savior and believes in it. She believes that the instructions in the word of God will help her to be a better wife and a better mother. Scripture has the power to transform the mind and answer life's difficulties. Her conducts, her conversations and her character reflects it. A mothers prayers shapes the spiritual life of her children. The power of a praying mother knows no bounds because it is anchored in power and goodness of God. (ISamuel 2:1-2)

## TRUSTING GOD.

She's a mother who has learnt to trust God in every need in her life. She recognizes that God's made promises in the word of God for meeting her needs, not just a physical needs or material needs but also emotional needs. A mother has emotional needs that people quite fully don't understand. A woman who loves God doesn't talk about being poor, she doesn't talk about having less and never compared herself with somebody else, and rather, she talks about God's sufficiency in her life. Women like Hannah (the mother of Samuel), Mary (the mother of Jesus) and Elizabeth (the mother of John the Baptist) exemplified unwavering faith and trust in God.

## SHE IS GENEROUS TOWARDS OTHERS.

2 Corinthians 9: 6:Remember this: Whoever sows sparingly will also reap sparingly, and whoever sows generously will also reap generously. 7:Each of you should give what you have decided in your heart to give, not reluctantly or under compulsion, for God loves a cheerful giver

Even when she has nothing, she would always give somebody something. A generous heart is not selfish. A generous heart id thinking about others. Not just money, but time, encouragement, empathy and love are some good forms of generosity too. Sometimes a word of encouragement is far more powerful than money. Compliments somebody, she build them up, everyone wants to be built up and no one wants to be torn down. Generosity is a Godly quality. It is not what I can do for myself but what can I do for others which is a Christ like spirit.

## GODLY MOTHER IS ONE WHO IS GOING TO OBEY GOD.

She knows that obeying God is profitable not only for her but also for her children and her husband. Obey God, he is omnipresent, omnipotent and omniscient he has all the power he can provide everything, leave all the consequences to him and that is the bottom line of life.

Everybody's house hold has an atmosphere. There is an atmosphere of freedom, atmosphere of love, atmosphere of welcome, or when you go home you can sense something is wrong, nobody has to say anything, you just know that something is wrong. A mother knows how to create Godly atmosphere.

## SHE IS FORGIVING.

The bible teaches us to be forgiving. Ephesians 4:32 Be kind to one another, tenderhearted, forgiving one another, as God in Christ forgave you. An unforgiving spirit is a spirit of tension and stress. God who lives in you, He has given the capacity to forgive anybody. Forgiveness is a vital part of family spirit. Being able to forgive is difficult but look for what Jesus forgave us for. So, you be kind to one and another and tender hearted. Examine in your household if there is spirit of forgiveness.

### HOLDS A SERVANT SPIRIT.

1 Peter 4:10-11 - Each of you should use whatever gift you have received to serve others, as faithful stewards of God's grace in its various forms. Do not be slothful in zeal, be fervent in spirit, serve the Lord.

Jesus was a servant. We are to have a servant spirit. She serves everybody every day and all of her life, giving up herself. A servant spirit is Godly Spirit. It is not selfish. A servant spirit is what can I do for you how can I help him/ her.

We serve the living God by serving our family. Mark 10:45 -For even the Son of Man came not to be served but to serve, and to give His life as a ransom for many.

### LOVES UNCONDITIONALLY.

The ultimate teaching and life lesson from Jesus is to Love unconditionally. It is easier for us to love someone whom we like, or someone who is good to us. But a Godly mother exhibits a empathetic love towards even the people who could have hurt her. This is the virtue by which all other characteristics are fulfilled. I Cor: 13: 1-3 says "Though I speak with the tongues of men and of angels, but have not love, I have become sounding brass or a clanging cymbal. 2 And though I have the gift of prophecy, and understand all mysteries and all knowledge, and though I have all faith, so that I could remove mountains, but have not love, I am nothing. 3 And though I bestow all my goods to feed the poor, and though I give my body [a]to be burned, but have not love, it profits me nothing." Love like Jesus.

Content is inspired from sermon by Dr. Charles Stanley – In Touch

Article by

## MRS. CATHERINE FRANKLIN

WOMEN'S Fellowship





# ஏகூத்

## விசுவாசமும் தைரியமுமுள்ள ஒரு மனிதன்

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

யெகோவாவுக்கு கீழ்ப்படிதல் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது, கீழ்ப்படியாமை சாபங்களில் விளைவடைகிறது. (உபாகமம்-11:26-28) என்றபோதிலும், இஸ்ரவேல் ஜனத்தார் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளத் தவறினர். சமாதானமான 40 ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர், அவர்கள் மறுபடியுமாக மெய் வணக்கத்தைப் புறக்கணித்தனர். -நியாயா 3:12

### மோவாபினால் பிடிக்கப்பட்டனர்

இந்த முறை யெகோவா தம்முடைய ஜனங்களை எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவின் கைகளுக்குள் விழும்படியாக அனுமதித்தார். பைபிள் அவனை 'மிகவும் தடித்த மனிதன்' என்பதாக வருணிக்கிறது. அம்மோன் மற்றும் அமலேக்கின் உதவியோடு, எக்லோன் இஸ்ரவேலரைத் தாக்கி எரிகோவில் 'பேரீச்சமரங்களின் பட்டணத்தில்' தன் அரண்மனையைக் கட்டினான். இஸ்ரவேலரால் முதன் முதலாக கைப்பற்றப்படப் போகிற கானானிய பட்டணம் இப்பொழுது பொய் கடவுளாகிய காமோஸை, வணங்கிவந்தவனின் படைக்களமாக சேவித்தது எத்தனை முரணாக உள்ளது! - நியாயாதிபதிகள்-3:12,13,17. எக்லோன் அடுத்த 18 வருடங்களுக்கு இஸ்ரவேலரை ஒடுக்கினான், ஒருவேளை பாரமாக இருந்த வரியை அவர்களிடம் வற்புறுத்திப் பெற்றான். அவ்வப்போது கப்பம்கட்டும்படியாக வற்புறுத்துவதன் மூலம் மோவாப் தன்னுடைய சொந்த பொருளாதார நிலைமையை வலுப்படுத்திக்கொண்டது, இஸ்ரவேலரின் வருமானங்களோ குறைய ஆரம்பித்தன. புரிந்துகொள்ளத்தக்கதாக கடவுளுடைய ஜனங்கள் உதவிக்காக கூக்குரலிட்டார்கள், யெகோவா மறுபடியுமாக செவிசாய்த்தார்.

### மோவாபினால் பிடிக்கப்பட்டனர்

இந்த முறை பென்யமீன் கோத்திரத்தாராகிய ஏகூத் என்ற பெயர் கொண்டவரை - அவர்

அவர்களுக்காக எழுப்பினார். இஸ்ரவேலரின்மீது எக்லோனின் கொடுங்கோலாட்சிக்கு முடிவைக் கொண்டுவர, ஏகூத் அடுத்துவரும் கப்பம்கட்டும் நாளில் நடவடிக்கை எடுக்க திட்டமிட்டார்.-நியாயாதிபதிகள் 3:14, 15.

துணிச்சலான தன்னுடைய நடவடிக்கைக்கு தயார் செய்வதற்காக, ஏகூத் ஒருமுழ நீளமுள்ள இருபுறமும் கருக்குள்ள ஒரு கத்தியை உண்டுபண்ணிக்கொண்டார். இது ஒரு குறுகிய நீளமுள்ளதாக இருந்திருந்தால், அந்தக் கருவி சுமார் 38 சென்டிமீட்டர் நீளமானதாக இருந்திருக்கும். சிலர் அதை ஒரு உடைவாளாக கருதுவர். கத்திக்கும் கைப்பிடிக்கும் இடையில் குறுக்கு துண்டு எதுவும் இல்லை. ஆகவே, ஏகூத்தால் தன்னுடைய சிறிய பட்டயத்தை தன்னுடைய வஸ்திரத்தின் மடிப்புகளுக்குள் ஒளித்து வைக்கமுடியும். மேலுமாக, ஏகூத் இடதுகைப் பழக்கமுள்ளவராக இருந்தபடியால், அவரால் வலதுபக்கத்தில் தன்னுடைய பட்டயத்தைத் தொங்கவிட்டுக் கொள்ள முடியும்-சாதாரணமாக ஒரு ஆயுதத்தை வைப்பதற்குரிய இடமாக அது இல்லை. நியாயாதிபதிகள் 3:15, 16. அவர் தைரியத்தை வெளிப்படுத்துகிறவராய் யெகோவாவில் விசுவாசத்தைக் காண்பித்து தன்னுடைய திட்டத்தின்படி செயல்பட ஆரம்பித்தார்.

### ஏகூத் எக்லோனைச் சந்திக்கிறார்

அடுத்த கப்பங்கட்டும் நாள் வந்துவிடுகிறது. ஏகூத்தும் அவருடைய மனுஷர்களும் ராஜாவின் அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள். சீக்கிரமாகவே, எக்லோன் ராஜாவுக்கு முன்பாக அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் தாக்குவதற்கு ஏகூத்துக்கு இன்னும் நேரம் வரவில்லை. கப்பங்கட்டிய பிறகு, ஏகூத் கப்பம் சுமந்து வந்தவர்களை அவர்களுடைய வழியே போகும்படியாக அனுப்பிவைத்தார்.-நியா 3:17,18.

ஏகூத் வாய்ப்பான ஒரு சமயத்துக்காக காத்திருந்தார். எக்லோனை சிறிது நேரம் சந்தித்தது, அரண்மனையின் அமைப்போடு பழக்கமாவதற்கும் ராஜாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அளவை விசாரித்தறிவதற்கும் அவருக்கு உதவியது.

'கில்காலிலுள்ள சிலைகள் இருக்கும் இடத்தை' அடைந்தப்பிறகு, ஏகூத் தன்னுடைய மனுஷர்களைவிட்டுவிட்டு எக்லோனின் அரண்மனைக்குத் திரும்பினார். சுமார் இரண்டு கிலோமீட்டர் நடைப்பயணம், ஏகூத்துக்கு தான் செய்யவிருப்பதைக் குறித்து சிந்திப்பதற்கும் யெகோவாவின் ஆசீர்வாதத்துக்காக ஜெபிப்பதற்கும் அவருக்கு சிறிது நேரத்தை அளித்தது. -நியாயாதிபதிகள் 3:19.

### ஏகூத் திரும்பிவருகிறார்

முதல் சந்திப்பு சிறிது நேரமே நீடித்திருந்தபோதிலும், ராஜாவோடு ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள ஏகூத்துக்கு போதிய வாய்ப்பை அளித்திருந்தது. எப்படியிருந்தாலும், ஏகூத் எக்லோனின் முன்னிலையில் திரும்பவும் வந்துவிட்டார்.

"ராஜாவே, உம்மிடத்தில் சொல்லவேண்டிய இரகசியமான ஒரு வார்த்தை உண்டு,"

என்பதாக ஏகூத் சொன்னார். ஏகூத் கொண்டிருந்த அந்த “இரகசியமான ஒரு வார்த்தை” ராஜாவின் பணிவிடைக்காரர்களின் முன்னிலையில் பேசப்பட முடியாது. “பொறு” என்பதாக ராஜா கட்டளையிட்டார். ‘இரகசியமான வார்த்தை’ பிறரால் கேட்கப்படுவதை எக்லோன் விரும்பாத காரணத்தால், அவன் தன் பணிவிடைக்காரர்களை அனுப்பிவிட்டான்.

ஏகூத் எக்லோனிடம் வந்து, “உம்மிடத்தில் சொல்லவேண்டிய தேவவாக்கு எனக்கு உண்டு,” என்பதாக சொன்னபோது அவன் தன்னுடைய மேலறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். ஏகூத் ‘தேவன்’ என்பதாக சொல்வதன் மூலம் காமோஸை குறிப்பிட்டுக்கொண்டிருந்தாரா? எக்லோன் அவ்விதமாக நினைத்திருக்கலாம். ஆவல் கொண்டவனாய், அவன் எதிர்பார்த்துக் கொண்டே தன்னுடைய சிங்காசனத்திலிருந்து எழுந்து நின்றான். தன்னைத் தாக்கவருவதாக ராஜா சந்தேகங்கொள்ளாத விதமாக ஏகூத் கவனமாக கிட்டே நெருங்கினார். பின்னர் துரிதமாக இயங்கி, “ஏகூத் தன் இடதுகையை நீட்டி, தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருந்த கத்தியை உருவி, அதை அவன் வயிற்றுக்குள் பாய்ச்சினார். அலகோடேகூடக் கைப்பிடியும் உள்ளே புகுந்தது; அவனுடைய வயிற்றிற்குள் போன கத்தியை இவர் இழுக்கக் கூடாதபடிக்கு, நிணம் அலகைச் சுற்றிக்கொண்டடைத்தது; அது பின்புறத்திலே புறப்பட்டது.” -நியாயாதிபதிகள் 3:20-22.

கில்காலில் சிலைகளுள்ள இடத்தைக் கடந்து, கடைசியில் எப்பிராயீமின் மலைப்பிரதேசமாகிய சேயிராத்தைச் சென்றடைந்தார்.

“அக்காலத்திலே மோவாபியரில் ஏறக்குறையப் பதினாயிரம்பேரை வெட்டினார்கள்; அவர்களெல்லாரும் புஷ்டியுள்ளவர்களும் பராக்கிரமசாலிகளுமாயிருந்தார்கள்; அவர்களில் ஒருவனும் தப்பவில்லை,” என்பதாகச் சொல்கிறது. மோவாப் கீழ்ப்படுத்தப்பட்ட பின்பு, இஸ்ரவேல் தேசம் எண்பது வருஷம் அமைதலாயிருந்தது. -நியாயாதிபதிகள் 3:26-30.

### ஏகூத்தின் முன்மாதிரியிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

கடவுள்மீது கொண்டிருந்த விசுவாசம் ஏகூத்தை தூண்டி இயக்கியது. எபிரெயர்11-ஆம் அதிகாரம் ‘விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்து,. யுத்தத்தில் வல்லவர்களாகி அந்நியருடைய சேனைகளை முறியடித்த’ மனிதர்களில் ஒருவராக இவரை திட்டவட்டமாக குறிப்பிடுவது இல்லை. (எபிரெயர் 11:33,34) இருந்தபோதிலும், ஏகூத் விசுவாசத்தோடு செயல்பட்டு இஸ்ரவேலரை எக்லோன் ராஜாவின் கொடுங்காலாட்சியிலிருந்து விடுவித்தபோது யெகோவா அவருக்குத் துணையாக இருந்தார். தைரியம் ஏகூத்தின் குணங்களில் ஒன்றாக இருந்தது. சொல்லர்த்தமான ஒரு பட்டயத்தை திறம்பட உபயோகிப்பதற்கு அவர் தைரியமுள்ளவராக இருக்க வேண்டியிருந்தது. கடவுளுடைய தற்கால ஊழியர்களாக நாம் அப்படிப்பட்ட ஒரு பட்டயத்தை எடுப்பதில்லை. (ஏசாயா 2:4; மத்தேயு 26:52) என்றபோதிலும், நாம் கடவுளுடைய வார்த்தையாகிய ‘ஆவியின் பட்டயத்தை’நிச்சயமாகவே பயன்படுத்துகிறோம். (எபேசியர் 6:17) ஏகூத் தன்னுடைய ஆயுதத்தைப் பயன்படுத்துவதில் தேர்ச்சிப்

பெற்றவராக இருந்தார். நாமும்கூட ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கிக்கையில் கடவுளுடைய வார்த்தையைப் பயன்படுத்துவதில் திறம் பட்டவர்களாக இருப்பது அவசியமாகும். (மத்தேயு 24:14) தனிப்பட்ட பைபிள் படிப்பு, கிறிஸ்தவ கூட்டங்களில் ஒழுங்காக ஆஜராயிருத்தல், ஊழியத்தில் வைராக்கியமாக பங்குகொள்ளுதல், நம்முடைய பரம தந்தை மேல் சார்ந்திருத்தல் ஆகியவை உண்மையில் விசுவாசமும் தைரியமுமுள்ள மனிதராக இருந்த ஏகூத் வெளிக்காட்டிய குணங்களைப் பின்பற்றுவதற்கு நமக்கு உதவிசெய்யும்.

ARTICLE BY

## MR. STEPHEN CHELLARAJ




## OCTOBER '24 - QUESTIONS

1. வாழ்விலும் சாவிலும் பிரியாதவர்கள் யார்?
2. கலைமான்களில் ஒன்றைப் போல வேகமாய் ஓடுகிறவன் யார்?
3. தாவீது சாபமிட்ட குடும்பம் யாருடையது?
4. இஸ்போ சேத்தின் தலையை என்ன செய்தார்கள்?
5. செடிகளின் இரைச்சலைக் கேட்டு போருக்குப் போனது யார்?
6. மூன்று மாதங்கள் தன் வீட்டில் பெரும் ஆசீர்வாதம் பெற்றது யார்?
7. தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம் என்றது யார்?
8. தாவீதின் மந்திரி யார்?
9. யோனத்தானின் பேரன் யார்?
10. சீரியர் மேல் யுத்தம் பண்ணப் போனவர்கள் யார்?
11. அபிமெலேக்கு இறந்த இடம் எது?
12. சாலமோனின் மற்றொரு பெயர் என்ன?

### செப்டம்பர்- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

திருமதி. ராதிகா செல்வக்குமார்,

திருமதி.ரேனா ஜோஸ்,

செல்வி. அஜின்ஷா,

திருமதி. ஜெயின் அற்புதக்கனி

### செப்டம்பர்- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்,

திருமதி பிப்ளின் நெல்சன்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

YOUR NAME / BIBLE QUIZ / OCTOBER'24 /
SEND TO: CSITCALAIN@GMAIL.COM
056 766 8348

Name:


Date:

# Kids Coloring



## Find the Way

Name : ........................................



# WORD SEARCH

## Elisha

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | O | O | W | I | C | T | E | R | J | F | N | J | D | W | N | F |
| Y | Z | D | B | S | A | K | N | N | L | M | D | U | O | E | M | Y |
| W | W | K | G | B | W | S | G | D | K | G | E | Y | G | M | D | J |
| C | L | V | L | E | G | S | E | M | Y | Z | G | U | D | D | L | X |
| H | P | E | E | L | G | B | E | N | S | W | U | O | V | M | I | H |
| O | E | B | V | I | I | N | Y | C | T | F | F | H | C | S | Z | E |
| W | D | L | W | S | U | T | R | D | X | M | E | S | R | T | T | P |
| W | I | R | Y | H | Y | C | X | N | C | B | R | A | U | K | M | F |
| E | Y | O | S | A | I | M | H | Z | K | N | E | H | T | A | L | O |
| P | T | O | T | A | C | D | Q | W | G | L | G | G | L | P | K | O |
| N | X | M | Y | E | J | H | I | G | H | S | E | P | H | O | I | R |
| Q | A | A | D | A | H | R | A | K | Q | B | A | O | E | R | S | M |
| S | P | B | N | K | N | P | W | I | Q | H | U | M | A | W | L | M |
| W | B | B | V | Y | E | H | O | O | R | S | X | P | U | U | E | B |
| Q | V | L | E | H | N | L | T | R | E | Y | C | N | Q | E | T | F |
| W | X | I | D | P | E | Z | J | T | P | D | Q | Z | M | V | L | M |
| O | N | Y | T | I | L | A | T | I | P | S | O | H | G | X | K | V |


| | | | |
|---|---|---|---|
| God | Refuge | House | Hospitality |
| Lamp | Table | Chair | Bed |
| Roof | Room | Shunem | Israel |
| Elisha | Prophet | Samuel | |

Name : ..........................................................................

**CROSS WORDS**

Name : ..............................................................................

# Elisha




**Across**

2. In the room Elisha saw a bed, table, __________, and lamp.

7. The Lord will always ________________.

8. The ___________ lady made a room for Elisha?

9. Elisha was very _________________.

10. Who was a special friend of God?

**Down**

1. Who was Elisha's servant?

3. Elisha new that he was always __________________ here.

4. Elisha went to ______________ messages from God.

5. The lady knew that Elisha was a man of __________.

6. Elisha traveled a lot to ______________ people.

# NOVEMBER - 2024

| | |
|---|---|
| 01-NOVEMBER | Mr. M.C. Christopher |
| 01-NOVEMBER | Ms. Jeremy Evans Prince S/o Mr. Prince Pitchiah |
| 03-NOVEMBER | Master. Aiden Mathew S/o Mr. Prasanna Kumar. M |
| 06-NOVEMBER | Mr. R. Paul Gnana Prabu |
| 06-NOVEMBER | Ms. A. Jenifer |
| 06-NOVEMBER | Mr. Glymond Fenzer |
| 07-NOVEMBER | Master. Meraj Daniel S/o Mr. Thangaraj Daniel |
| 09-NOVEMBER | Mrs. Sunitha Ravindra |
| 12-NOVEMBER | Ms. Jenisha Christina D/o Mr. Christopher |
| 12-NOVEMBER | Ms. Ida Priskilla D/o Mr. Baktha Thiyagarajan |
| 14-NOVEMBER | Mrs. Jein Arputhakani Rajavel |
| 14-NOVEMBER | Ms. Bessy Rose D/o Mr. Justin Oliver |
| 14-NOVEMBER | Master. Senen Liam Raj S/o Mr. Simeyon. S |
| 15-NOVEMBER | Master. Jahosh John Joseph S/o Mr. John Joseph |
| 17-NOVEMBER | Mrs. Harika Chandrasekar |
| 17-NOVEMBER | Master. Raja Sekar S/o Mr. Selva Nayagam |
| 18-NOVEMBER | Master. Prince Abraham Daniel S/o Mr. Rajan Prabakaran |
| 19-NOVEMBER | Mr. Prince Emmanuvel |
| 19-NOVEMBER | Mr. G. Stanly |
| 19-NOVEMBER | Ms. Jaya Prithi D/o Mr. Selva Nayagam |
| 20-NOVEMBER | Mrs. J. Ajeetha |
| 21-NOVEMBER | Mr. Lawrence Gambeeram |
| 23-NOVEMBER | Mrs. J. Vivilin Juni |

| | |
|---|---|
| 23-NOVEMBER | Mrs. Hephzibah |
| 25-NOVEMBER | Ms. Abiya D/o Mr. Sankaran Chinniyan |
| 25-NOVEMBER | Mrs. Grace Packia Sugirtha |
| 26-NOVEMBER | Ms. Evalina D/o Mr. Jayan Dharmaraj |
| 27-NOVEMBER | Mrs. Suja Jasmine Mesiah Das |
| 27-NOVEMBER | Mrs. M. Aishwariya |
| 27-NOVEMBER | Mrs. Annie Selvi Danesh |
| 28-NOVEMBER | Mrs. Josephine Nimshi |
| 28-NOVEMBER | Master. Cairo Maverick S/o Mr. Lifin Raj. P |
| 29-NOVEMBER | Mr. S. Deva Prakash |
| 30-NOVEMBER | Ms. J.S. Inial Evangelin D/o Mr. Stephen Chellaraj. J |




# NOVEMBER *Wedding* ANNIVERSARY

**08- NOV** Mr. A. Prem Jenifer & Mrs. Baby Christy Monalizha

**23- NOV** Mr. G. Stanly & Mrs. R. Gold Jency

**30- NOV** Mr..Babu Abraham & Mrs. Babitha Babu

**30- NOV** Mr. J. Stephen Chellaraj & Mrs. P. Hemalatha




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**